சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 20/2019

பெயர். திருமதி. கோவிலம்மாள். நாள் 01.10.2024

க /பெ. தேசிங்கு

**மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் நிலை விசாரணை தொடர்ச்சி**

3. விபத்து சம்மந்தமான முதல் தகவல் அறிக்கை நகல் ம.த.சா.ஆ.1. என்னுடைய விபத்துப் பதிவேட்டு நகல் ம.த.சா.ஆ.2. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு சான்றிதழ் மற்றும் காப்பீட்டுச் சான்றிதழ் நகல்கள் முறையே ம.த.சா.ஆ.3 மற்றும் ம.த.சா.ஆ.4. என்னுடைய ஆதார் அட்டை மற்றும் வங்கிக் கணக்குப் புத்தகத்தின் நகல்கள்(அசலுடன் ஒப்பிடப்பட்டது) ம.த.சா.ஆ.5 மற்றும் 6. எனக்கு வழங்கப்பட்ட மருத்துவ சிகிச்சைக்கான குறிப்புரைகள் ம.த.சா.ஆ.7. மருத்துவ சிகிச்சை பெற்றதற்காக ரசீதுகள் ம.த.சா.ஆ.8. எனக்கு எடுக்கப்பட்ட நுண்கதிர்ப்படங்கள் ம.த.சா.ஆ.9. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

2. விபத்து நடந்து 5 நாட்கள் கால தாமதமாக புகார் அளிக்கப்பட்டது என்றால் சரிதான். விபத்தின்போது இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபர் என் கணவர் தேசிங்கு என்றால் சரிதான். எங்கள் சொந்த ஊர் விநாயக நல்லூர் என்றால் சரிதான். எங்கள் ஊருக்கு செல்ல வேண்டும் என்றால் மேலவலம் கடந்து உத்தரமேரூர் செல்லும் சாலையில்தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். விபத்து கரிக்கிலி பேருந்து நிறுத்தத்திற்கு அருகே நடந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என் கணவர் இருசக்கர வேகமாக சென்று வேகத்தடையில் ஏறியதால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் வேகத்தடை இருப்பது எங்களுக்கு தெரியவில்லை. மேலவலம் கிராமத்தில் இருந்து நெல்வாய் கூட்டுச் சாலை வரை

வேகத்தடைகள் உள்ளது என்றால் சரிதான். அந்த சாலையில் நாங்கள் அடிக்கடி பயணிப்போம் என்றால் சரிதான்.

3. மெதுவாக சென்றிருந்தால் விபத்தைத் தவிர்த்திருக்கலாம் என்றால் நாங்கள் மெதுவாகத்தான் சென்றோம். விபத்து என் கணவரால் தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அடிக்கடி அந்த சாலையில் நாங்கள் பயணம் செய்வதால் வேகத்தடை பற்றி நன்கு தெரிந்திருந்து வேகமாக சென்று நாங்கள் விபத்தை வரவழைத்துக் கொண்டோம் என்றால் சரியல்ல. விபதிற்கு என் கணவரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதைதான் காரணம் என்றால் சரியல்ல. ம.த.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை என் கணவர் மீதுதான் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் 2ம் எதிர்மனுதாரர் மீது எவ்வித நஷ்ட ஈடும் நாங்கள் கோர முடியாது என்றால் சரியல்ல. என் கணவருக்கு ஓட்டுநர் உரிமமம் உள்ளது. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என் கணவருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. காப்பீட்டு விதிமுறைகளை மீறி வாகனத்தை ஓடடிச் சென்றதால் அதற்கு எவ்வித நஷ்ட ஈடும் எங்களுக்கு கிடைக்கக் கூடியதல்ல என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்,கள் அனைத்தும் சாதாரண காயங்கள் என்றால் சரியல்ல. நான் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டேன். நான் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியலல. நான் கேட்டுள்ள இழப்பீட்டுத் தொகை அதிகம் என்றால் சரியல்ல. நான் இருசக்கர வாகன உரிமையாளரிடம்தான் இழப்பீடு கோர இயலும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.